# FIRST INFORMATION REPORT

# முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)
(BNSS பிரிவு 173 இன் கீழ்)

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.வி.மு.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8129858

1. District : திருச்சி மாவட்டம் PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, Year: 2024, FIR No.: 12/24 Date: 13.09.20
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (As amended in 2018) Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 106
(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 12.09.2024 Date to : 1700 hrs.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 13.09.2024 Time : 1200 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) — Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் ~~மொழியாக~~ (கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: வட்டார போக்குவரத்து பகுதி அலுவலகம் மணப்பாறை, சுமார் 40 km மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : ஆ. இராஜலட்சுமி (b) Father's/ Husband's Name : ஆறுமுகம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 07.03.1982 (d) Nationality : இந்தியன் (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : மாவட்ட ஆய்வுக் குழு ஆய்வாளர் (g) Address : மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt. P. சத்யா, D/O பழனிச்சாமி, மோட்டார் வாகன ஆய்வாளர்-1, மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், மணப்பாறை, திருச்சி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறைப்பீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13.9.24 13/09/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 13.09.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் F. [illegible]
Rank: நிலை காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு துறை, திருச்சி.

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2024–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 13.09.2024 பணியில் இருந்த போது காலை 12.00 மணியளவில் ஆ.இராமலெட்சுமி, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி என்பவர் நிலையம் ஆஜராகி 12.09.2024ம் தேதி திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டார போக்குவரத்து பகுதி அலுவலகத்தில் திடீர் சோதனை செய்தபோது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகளின்படி (மகஜர்) நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அவர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் மற்றும் திடீர் சோதனை செயல்முறைகளின் (மகஜர்) விபரங்கள் பின்வருமாறு 13.09.2024 திருச்சிராப்பள்ளி அனுப்புநர் ஆ.இராமலெட்சுமி, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. அம்மா, பொருள்:மணப்பாறை வட்டார போக்குவரத்து பகுதி அலுவலகம் – திடீர் சோதனை மேற்கொண்டது – மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி . . . திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி இரகசிய தகவலின் அடிப்படையில், 12.09.2024ம் தேதி, மாலை சுமார் 17.00 மணியளவில், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளராகிய என் தலைமையில், திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.தி.சேவியர்ராணி மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டார போக்குவரத்து பகுதி அலுவலகத்தினை திடீர் சோதனை மேற்கொண்டோம். மேற்படி சோதனையின்போது மோட்டார் வாகன ஆய்வாளர்–1 அறையில் அமர்ந்திருந்த திருமதி.சத்யா என்பவரின் இருக்கைக்கு எதிரே இருந்த கணினி டேபிள் அடியில் பச்சை நிற கேரிபேக்கில் 500, 200 மற்றும் 100 ரூபாய் நோட்டுகள் கத்தையாக இருந்த பணத்தை, நான், எடுத்து எண்ணிப்பார்த்ததில் அதில் ரூ.1,14,800/– இருந்தது, மேற்கண்ட பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.சத்யாவிடம் கேட்க எதுவும் பேசாமல் மவுனமாக இருந்தார். மேலும், மேற்படி பணம் இருந்த கேரி பேக்கில் ஒரு வெள்ளை தாளில் இரண்டு பக்கமும் பென்சிலால் எழுதப்பட்ட சில குறிப்புகள் இருந்தது பற்றி கேட்ட போது, அதற்கு அவர், மணப்பாறையை சுற்றியுள்ள டிரைவிங் ஸ்கூல் சம்மந்தப்பட்டதாகும் என தெரிவித்தார். ஆகவே, மேற்கண்ட பணம் பொது மக்களிடமிருந்து இடைத்தரகர்கள் மூலமாகவும் நேரடியாகவும் கையூட்டு கேட்டு பெற்று வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் மற்றும் குறிப்புகள் அடங்கிய வெள்ளை தாளையும் காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. இதுகுறித்து திடீர் சோதனை செயல்முறைகள் 17.30 மணி முதல் 20.30 மணிவரையில் தயார் செய்யப்பட்டது. மேற்படி திடீர்

சோதனை செயல்முறையின் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் 12.09.2024ம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள, (Sd) (xxxx)ஆ.இராமலெட்சுமி, 13.09.2024 Submitted to the Court of the Hon'ble Special Judge for trial of cases under the Prevention of Corruption Act-1988, Trichy. Received this report and registered a case in Trichy V&AC Cr.No.12/2024 u/s 7 of Prevention of Corruption Act 1988 (as amended in 2018) r/w 106 BNSS on 13.09.2024 at 13.00 hrs (Sd) (xxxx), 13/09/2024, Inspector of Police, V&AC, Trichy. <u>திடீர் சோதனை செயல்முறை:-</u> இன்று 12.09.2024 மாலை 17.30 மணிக்கு திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், மணப்பாறை – குளித்தலை மெயின்ரோட்டில் மாகாளிப்பட்டி கிராமத்தில் உள்ள மணப்பாறை வட்டார போக்குவரத்து பகுதி அலுவலகத்தை திருமதி.இராமலெட்சுமி, வயது 42/2024 த/பெ ஆறுமுகம், க/பெ.வீரராகவன், மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி அவர்கள் தலைமையில் திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.F.சேவியர் ராணி மற்றும் குழுவின மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து அலுவலக மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் செயல்முறை நடவடிக்கை மகஜர். திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டார போக்குவரத்து பகுதி அலுவலகத்தில் பணியாற்றும் பொதுப்பணியாளர்கள் தங்கள் அலுவலகப் பணியினை செய்து தருவதற்காக இடைத்தரகர்கள் மூலம் பொது மக்களிடமிருந்து கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், இடைத்தரகர்கள் மேற்படி பொது பணியாளர்களுக்காக, பொது மக்களிடமிருந்து அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதலாக பணம் பெற்று கூஷ பொது பணியாளர்களுக்கு கொடுப்பதாகவும் அதில் இடைத்தரகர்களும் பயன் பெறுவதாகவும் திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு தொலைபேசியில் கிடைத்த ரகசிய தகவலின் பேரில், இன்று 12.09.2024 மாலை 17.00 மணிக்கு கூஷ திருச்சி, மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளர், விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் திருச்சி மாவட்ட, மணப்பாறை வட்டார போக்குவரத்து பகுதி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகத்தை சுற்றி நான்கு திசைகளிலும் காவலர்களை பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டது. கூஷ அலுவலகமானது கிழக்கு பார்த்து அமைந்துள்ளது. கூஷ அலுவலகத்தின் நுழைவாயிலின் முன்பு போர்ட்டிகோவும், அதனை அடுத்து அலுவலகத்தின் உள்ளே முதலில் வரவேற்பு அறையும், அதன் எதிர்புறம் புகைப்படம் எடுக்கும் அறை கிழக்கு பார்த்தும், அதனை அடுத்து உள்ளடங்கியதாக உள்ளே கழிவறைகள் உள்ளது. வரவேற்பு அறையின் வலது புறம் அலுவலக அறை தெற்கு பார்த்தும், வரவேற்பறையின் தென்கிழக்கில் புகைப்படம் எடுக்கும் அறையும், அதனை அடுத்து கழிவறை செல்லும் வழியும், அதனை அடுத்து கணினி அறையும், அதனை அடுத்து மோட்டார் வாகன ஆய்வாளர்-1 அறையும்,

மேற்படி அறையின் எதிரே மாடிப்படிகட்டுகளும், அதனை அடுத்து பதிவறையும் உள்ளது. மேற்படி அலுவலக வரவேற்பரையின் தெற்கு பார்த்து உள்ள அலுவலக பணியாளர் இருக்கை அறையின் உள்ளே மோட்டார் வாகன ஆய்வாளர்–2 அறையும், அதனை அடுத்து எழுது பொருள் அறையும், அதில் எம்–1 இருக்கையும், மேற்படி அறையில் உள்ளே கணிணி அறையும், அதனை அடுத்து அலுவலக கண்காணிப்பாளர் இருக்கையும், அதனை ஒட்டி எம்–2 இருக்கை உள்ளது. மேற்படி வரவேற்பறையில் 5 நபர்கள் நின்றுகொண்டிருந்தனர். புகைப்படம் எடுக்கும் அறையில் இருவர் அமர்ந்திருந்தனர். போர்ட்டிகோவில் அரசு வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது. மோட்டார் வாகன ஆய்வாளர்–1 அறையில் ஒரு பெண் அமர்ந்திருந்தார். மேற்படி, வரவேற்பறையில் 5 நபர்களின் அருகே காவலர்களை நிற்கவைத்துவிட்டு, மோட்டார் வாகன ஆய்வாளர்–1 அறையில் அமர்ந்திருந்தவரிடம் பெயர் பற்றி கேட்க தனது பெயர் சத்யா என்றும் தான் மேற்படி அலுவலகத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர்–1 என்றும் தெரிவித்தவரிடம், திடீர் சோதனை செய்ய வந்துள்ள விபரம் தெரிவிக்கப்பட்டது. மேற்படி MVI அலுவலகத்தின் அறையின் வரவேற்பறையில் நின்று கொண்டிருந்தவர்களை, மாவட்ட ஆய்வு குழு ஆய்வாளர் முன்னிலையில் விசாரிக்க தன் பெயர் 1) திரு.சக்திவேல், வயது.32/2024, த/பெ. பிச்சை, இராஜப்பட்டி, பன்னாங்கொம்பு, மணப்பாறை, திருச்சி மாவட்டம் என்றும், தான் TN45G1398 வாகனத்தின் ஒப்பந்த ஒட்டுனராக பணிபுரிவதாக தெரிவித்தார் அவரிடம் பணம் ஏதும் உள்ளதா என கேட்ட போது தன்னிடம் ரூ.690/– உள்ளது என தெரிவித்தார். மேலும், அப்பணம் பற்றி அவரிடம் கேட்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அவற்றை ஒப்பந்த பணியாளர்கள் கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்ததில் சரியாக இருந்ததால் அப்பணம் அவரிடமே கொடுக்கப்பட்டது. 2) திரு.பக்ரூதீன் வயது 40/2024, த/பெ காதர்ஷா, எண்.21, மாகாளிப்பட்டி, மணப்பாறை என்றும், ரூட் எக்ஸ்டன்ஸன் தொடர்பாக தான் கேட்க வந்ததாக தெரிவித்தார். அவரிடம் ரூ.50/– இருந்தது அப்பணம் பற்றி கேட்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது, 3) திரு.சீனிவாசன், வயது 61/2024, த/பெ துரைசாமி, எண்.31/ஏ1, வீராட்சி தெரு, வெள்ளக்கல் மஞ்சம்பட்டி, மணப்பாறை என்றும், வாகன உரிமம் தொடர்பாக தான் கேட்க வந்ததாக தெரிவித்தார், அவரிடம் ரூ.140/– இருந்தது அப்பணம் பற்றி கேட்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது, 4) திரு.அருண்பிரகாஷ், வயது 31/2024, த/பெ ஆரோக்கியம், மணபத்தை, அந்தோணியார்புரம், பொத்தப்பட்டி, வையம்பட்டி, மணப்பாறை, திருச்சி மாவட்டம் என்றும், மினி பஸ் உரிமம் தொடர்பாக தான் கேட்க வந்ததாக தெரிவித்தார், அவரிடம் ரூ.200/– இருந்தது அப்பணம் பற்றி கேட்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது மற்றும் 5) திரு.மணிகண்டன், வயது18/2024, த/பெ கோவிந்தராஜ், அம்மாசத்திரம் கிராமம், காடைதோள்பட்டி, கருமலை, மணப்பாறை, திருச்சி மாவட்டம் என்றும்,

தான் ஆட்டோ ஓட்டுனர் உரிமம் தொடர்பாக கேட்க வந்ததாக தெரிவித்தார், அவரிடம் இருந்து ரூ. 1840/– இருந்தது, மேற்படி பணம் குறித்து கேட்டதற்கு அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அப்பணத்தினை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர்–1 அறையில் அமர்ந்திருந்த திருமதி.சத்யா என்பவரை மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளர் விசாரணை செய்கையில் அவர் இருக்கைக்கு அருகில் இருந்த பிளாஸ்டிக் டப்பாவில் ரூ.300/– இருந்தது அப்பணம் பற்றி கேட்க தன் சொந்த பணம் என்று தெரிவித்தார். மேற்படி பணம் குறித்து அலுவலக ரொக்க கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க குறைவாக இருந்ததால் மேற்படி பணத்தினை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவரது இருக்கையின் எதிரே இருந்த கணினி டேபிளில் அடியில் பச்சை நிற கேரிபேக்கில் கத்தையாக இருந்த பணத்தை ஆய்வு குழு ஆய்வாளர் எடுத்து பார்க்கையில் 500, 200 மற்றும் 100 ரூபாய் நோட்டுகளும், கத்தையாக இருந்தது அவற்றை மாவட்ட ஆய்வு குழு ஆய்வாளர் எண்ணிப்பார்க்க அதில் ரூ.1,14,800/– இருந்தது. மேற்படி பணத்தை பற்றி கேட்க மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.சத்யா எதுவும் சொல்லாமல் மவுனமாக இருந்தார். மேலும், ஒரு வெள்ளை தாளில் வசூல் செய்த தொகை குறித்து காகித பென்சிலால் எழுதிய குறிப்புகளும் இருந்தது. மேலும், அந்த பணத்துடன் இருந்த வெள்ளைத் தாள்களை எடுத்து பார்க்க, அதில் முதல் பக்கத்தில் 1) VDS D(2) 2000, 2) Gobal-D(1)1000, 3)Uy-D(7)-7,000, 4)NDS-D(1) 1000, 5) Jus –D(3) 3000, 6)BDS-D-, S- (4) Monfort D(2) 2000, 5) AADS D(8)- 8000/- 6) Balaji NCP(1) 300, 2W (1) 100, 7) Hari NCP(1) 300, 8) Kathir LMV(1) 1000, 9) UY- FLAG (1) 1500, 10) JDS - RAU(1) 100, 11) NDS - FAW (2) 200, 12) Ramesh NCP (1) 300, மறுபக்கத்தில் 1)VDS OLD, SLD (1) 500, 2)Ashok –HGV (1)1500, 3)Gobal-NCP (2)- 3,000, 4)Gowri NCP(1) 1500, 5) JUS – A/R(1) 800, NCP(1) 1000, 6) BDS-EID (1)-, NCP(1) – 2NCP(1)-, MMGV(1)-, HGV-1-, HGV-1-, (7) AADS- NCP (1) 1000, 8) Ramesh NCP(1)- 1500/-, NCP(1) 1000, 9) Gobal HTV (2) -5000, 7) NDS HTV (1) 2500, 8) BDS LTV(1) -, 9) AADS - LTV (1) 1400, HTV – (1) 2500 என காகித பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. வெள்ளைதாளில் எழுதப்பட்டிருந்த குறிப்புகள் பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர்–1 திருமதி.சத்யாவிடம் மாவட்ட ஆய்வு குழு ஆய்வாளர் கேட்க, இவை எல்லாம் மணப்பாறை சுற்றியுள்ள டிரைவிங் ஸ்கூல் சம்பந்தபட்டதாகும் என்று தெரிவித்தார். எனவே, மேற்படி தொகை ரூ.1,14,800/–ம் பொதுமக்களுக்கு ஓட்டுனர் உரிமம் வழங்கவும், வாகன சான்று வழங்கவும், வாகன புதுப்பித்தல்(FC) செய்து தருவதற்காகவும் இடைத்தரகர்கள் மூலமாகவும், பொது மக்களிடமிருந்து நேரிடையாகவும் கையூட்டு கேட்டுப்பெற்று வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.1,14,800/–, பணம் வைக்கப்பட்டிருந்த பச்சை கலர் கேரிபேக் மற்றும் குறிப்புகள் அடங்கிய வெள்ளைத்தாளும் காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் புகைப்பட அறையில் நின்று கொண்டிருந்த இரண்டு நபர்களை விசாரணை செய்ய 1) திரு.சதிஷ் வயது 36/2024, த/பெ

கோவிந்தராஜ், எண்.17, ஏயுடி காலனி, தியாகராஜர் நகர், உறையூர், திருச்சி என்றும் தான் Bonton கணிணி நிறுவன ஒப்பந்த பணியாளர் என்றும், தனக்கு ஓட்டுனர் உரிமம் வேண்டி விண்ணப்பித்தவர்களை புகைப்படம் எடுக்கும் பணி என்று கூறினார். அவரை விசாரணை செய்கையில் அவர் தனது மணி பர்சில் ரூ.950/– இருந்தது அப்பணம் பற்றி கேட்க தன் சொந்த பணம் என்று தெரிவித்தார், மேற்படி பணத்தினை ஒப்பந்தப்பணியாளர் கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்ததால் அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 2) திரு.தியாகராஜன் வயது 38/2024, த/பெ மோகன், எண்.22B, வைகைநல்லூர் அக்ரஹாரம், 2வது தெரு, அண்ணாநகர், குளித்தலை, கரூர் மாவட்டம் என்றும், தான் Bonton கணிணி நிறுவன ஒப்பந்த பணியாளர் என்றும், தனக்கு RC Smart Card Print எடுக்கும் பணி என்று கூறினார். அவரை விசாரணை செய்கையில் அவர் தனது மணி பர்சில் ரூ.520/– இருந்தது அப்பணம் பற்றி கேட்க தன் சொந்த பணம் என்று தெரிவித்தார் மேற்படி பணத்தினை ஒப்பந்தப்பணியாளர் கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்ததால் அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 1) 2024 பணம் கையிருப்பு பதிவேடு 02.12.2023 முதல் 12.09.2024 வரை குறிப்புகள் உள்ளது 15 பக்கங்கள், 2) பான்டன் பணியாளர் 2024 பணம் கையிருப்பு பதிவேடு 01.01.2024 முதல் 12.09.2024 வரை குறிப்புகள் உள்ளது 6 பக்கங்கள், 3) 2024 வருகைப்பதிவேடு ஜனவரி 2024 முதல் செப்டம்பர் 12 ஆம் தேதிவரை பதிவுகள் உள்ளது 17 தாள்களில் குறிப்புகள் உள்ளது. 4) பான்டன் பணியாளர் 2024 வருகைப்பதிவேடு 01.01.2024 முதல் 12.09.2024 வரையில் பதிவுகள் உள்ளது 9 பக்கங்கள் கொண்ட மொத்தம் 4 பதிவேடுகள் காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனை நடவடிக்கைகள் அனைத்தும் அலுவலக வீடியோ காமிரா மூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனை இரவு 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி வேண்டுகோள் கடிதத்துடன் கூடிய திடீர் சோதனை செயல்முறையை (மகஜர்) பெற்று திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2024 u/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) r/w 106 BNSS ன்படி இன்று (13.09.2024) 1300 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் திருச்சிராப்பள்ளி, மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளர் திருமதி.ஆ.இராமலெட்சுமி கொடுத்த 13.09.2024 தேதியிட்ட கடிதம் மற்றும் 12.09.2024 தேதியில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இந்த முதல் தகவல் அறிக்கையில் இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

13/09/2024
(F. Xavier Rani)
Inspector of Police
VAC, Trichy.